குறிப்பிட்டேன். வட சென்னையில், இராயபுரம், எண்ணூர் பகுதியில் கடலரிப்புக்கு எதிரான தாற்காலிகப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக ரூ. 30·80 லட்சங்களுக்கான ஒரு மதிப் பீட்டை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அனுப்பி யுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பொ. சிகாமணி: தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரின் பேரவைச் செயலர் கூறியிருக்கிறார். ஏற்படுத்த இருக்கும் அந்தக் குழுவானது நிரந்தரமாக செயல்படுமா?

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, நிரந்தரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நில மற்றும் நீர் இயல் ஆய்வுத் துறை ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. அவர்களுடைய முடிவு வந்தவுடன் அதற்குப் பின்னாலே எந்த வகையிலே முயற்சிகள் மேற் கொள்ளப்படவேண்டுமோ அந்த வகையிலே மேற்கொள்ளப் படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே அழகுபடுத்தும் குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். அதே நேரத்திலே கடலரிப்பைத் தடுக்கின்ற முறையிலே—காசிமேடு போன்ற பகுதிகளிலே ஏற்கனவே ரோடுகளில் அரிப்பு ஏற்பட்டிருக்கிறது—தடுப்புச் சுவர் கட்டுவதற்கு உத்தேசம்) உண்டா?

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, திருவொற்றியூர் எண்ணூர் கடலோர பகுதிகளை அழகுபடுத்தும் திட்டம் பற்றிய கேள்வி இது.

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக் கட்டிடம்.

*வினா எண் 102 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக் கட்டிடத்தின் ஒரு பகுதியை கோ-ஆப்டெக்சிற்கு வாடகைக்கு விடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) வங்கியின் பழைய கட்டிடத்தின் ஒரு பகுதியை **கோவை மத்தியக் கூட்டுறவு வங்கி ''கோ-ஆப்டெக்சிற்கு'' 17—9—1979-ல் வாடகைக்கு விட்டுள்ளது.**

1980 பிப்ரவரி 11]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, வாடகைக்கு விடப்பட்ட அந்த இடத்திலே ''கோஆப்டெக்ஸ்'' ஷோ ரூம் வைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். அந்த இடத்திலே ஏர்-கண்டிஷன் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்றும் அறிகிறேன். அது உண்மையா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே.ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அந்த நிறுவனம் கைத்தறித் துணிகளை விற்கின்ற நிறுவனம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார். எனவே விற்பனையைப் பெருக்குவதற்காக அவர்கள் மற்ற உத்திகளை நிச்சயம் கையாள்வார்கள்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கியினுடைய அந்தக் கட்டடத்திலே கூட்டுறவு இலாகாவிற்குத் தேவையான பல காரியங்களுக்குக் கட்டடங்கள் இல்லாத கஷ்டம் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள்—வாடகைக்கு இடத்தை விடுவதற்குப் பதிலாக கூட்டுறவு இலாகாவிற்குத் தேவையான முறையிலே அதைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, கைத்தறி நிறுவனமும் கூட்டுறவுத் துறையினுடைய நிறுவனம் என்பதை மாண்புமிகு உறுப்பினர், அவர்களுடைய மேலான பார்வைக்கு நான் வைக்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே கூட்டுறவின் ஒரு பகுதி என்று கோவாப்டெக்சிற்குக் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். வாடகை என்ன முறையில் நிர்ணயிக்கப் பெற்றிருக்கிறது? எந்த தேதி முதல் வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 17—9—1979ல் அது வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. அந்த வாடகையைப்பற்றி அதற்குரிய அதிகாரிகள், கூட்டுறவுத் துறை கட்டிட மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். உரிய முறைப்படி வாடகை நிர்ணயிக்கப்படும்.